பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

552

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 MAY 1954

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-6 குருகுலம், மதம்பாக்கம் ; செய, சித்திரை; 16—4—54 தளிர்-26

குருகுலத்[illegible] குறிக்கோள்:

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

ஆமை அடக்கம்

யாமை ஒரு வியப்பான சிற்றுயிர்! வலிவு மிக்க பரந்த ஓடு ஒன்று தனது முதுகிற் சுவித்துக்கொண்டு, அது, உயிர் வாழ்கின்றது.

யாமை, வேகமாக ஓரிடத்துக்குப் போய் ஆகவேண்டிய காரியம் என்பது ஒன்றுமில்லை. வீடு தனது முதுகிலேயே இருத்தலின் எந்த இடத்திலும் நினைத்த நேரத்தில் தனக்குத் தானே பாதுகாப்புள்ளதாய்த் திகழ்கின்றது. ஓர் இடர் வரும் என்று அதற்குத் தோன்றினால், உடனே தன்னுடைய ஐந்து உறுப்புக்களையும் தன் ஓட்டின் உள் அடக்கிக்கொண்டு பத்திரமாய் இருக்கும். தன் கையே தனக்கு உதவி என்னும் அழகிய அமைதியுடன் உயிர்வாழும் உயிர் அது! அவசரத்துக்கே இடமில்லாத இந்த அமைதியினால், யாமை, மிக நீண்ட நாள் உயிர் வாழும் தகைமை பெற்றிருக்கின்றது!

ஆறறிவு வாய்ந்த மாந்தரும் இத்தகைய அடக்க அமைதியில் நிலைத்தால், எவ்வளவு நலமாயிருக்கும். மாந்தர்க்கு அமைதி கெடக் காரணமாயிருப்பதெல்லாம், ஐம்பொறிகளின் வாயிலாக வெளிப்படும் ஐந்து வகையான அவாக்களேயல்லது வேறில்லை.

அந்த அவாக்களை அடக்கித் தன் வீட்டில் தான் இருக்கிற மாதிரி உரிமையும் சிறப்புங் கொண்டு மாட்சிமை அடைய மாந்தர்க்கு இடமிருக்கிறது. ஆமைக்கு, ஓடு, வீடாயுள்ளது; மாந்தர்க்குப் பேரின்ப வீடு அதைவிடப் பெரிதாக உள்ளது. அந்தப் பேரின்ப வீட்டில் மக்கள் மிக்க உரிமை பெருமைகளுடன் பெருவாழ்வு வாழ இடமிருக்கிறது.

புற உலகில் இடர்கள் மிகுதி! அப்படி இடர் விளையும் வகைகளில் புலன்களை வெளியே ஏன் விடவேண்டும்? ஆமைபோல் ஐந்தடக்கல் செய்து காத்துக்கொள்ளலாம்.

இடர் இல்லாத வகைகளில், அதாவது நல்ல செயல்களில், புலன்களை உருவான காரியப்பாடாக இயக்கி உலகுக்கு உதவுவோம். தீமைகளில் ஐந்தடக்கி ஆமைபோல் இருப்போம்.

விடுதல் எளிது; அடக்குதல் அருமை! செயற் கரிய செய்வர் பெரியர்! அப்படி அரிய காரியமாய் இருத்தலால், அடக்கம் எழுமைக்கும் வலிவு தருகின்றது.

ஒருமையுள் ஆமைபோல்
ஐந்தடக்கல் ஆற்றின்,
எழுமையும் ஏமாப் புடைத்து.

ஒருமையுள்—ஒரு பிறப்பில், ஆமைபோல் ஐந்து அடக்கல் ஆற்றின்—ஆமையைப்போல் ஐந்து கருவிகளையும் அடக்குதல் செய்து ஒழுகினால், எழுமையும்—எழு பிறப்பிலும், ஏமாப்புடைத்து—அவ்வடக்கம் அரண் செய்வதாகும்.

ஒருமை எழுமை யென்பன பிறவிகளை உணர்த்தின. ஒரு பிறவியிற் செய்யும் பழக்கம் எழு பிறப்பும் பயன் செய்தலின், 'எழுமையும்' என்றார். ஏனைய செய்கைகளைவிட அடக்கத்துக்கு ஆற்றல் மிகுதியாதலின் 'ஏமாப் புடைத்து' என்றார்.

பாதுகாவலும் வலிமையும் அடக்கம் தரும் என்பது கருத்து. ஒருமையிற் செய்து எழுமையும் நலம்பெறும் இச் செயல் மிக்க எளிமையாயிருத்தலின் இதனிற் கருத்தாயிருத்தல் நன்று என்றபடி.

பாதுகாப்புக்காக நான்கு கால்களும் ஒரு தலையும் என ஐந்து உறுப்புக்களை ஆமை தனது முதுகு ஓட்டினுள் அடக்கிக் கொண்டு இடர் கடப்பதுபோல, மாந்தரும் ஐந்து பொறி வாயிலையும் தீய நெறிகளில் அடக்கிக் காத்துக் கொள்ளுதல் கடமை என்பது கருத்தாயிற்று.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

6-ம் ஆண்டுக் கையொப்பம்
(23-10-53 முதல்)

உள்நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0
ஆயுள்—				
கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.

கிளை	செய, சித்திரை,	தளிர்
6	16-4-54 வெள்ளி.	26

குறளில் கண்ட அரசியல்

(திரு. ம. பொ. சிவஞான கிராமணியார்)

மாம்பாக்கம் குருகுலத்தின் 5-ம் நாள் திருவள்ளுவர் குறள் விழா சென்னை திருவட்டீஸ்வரர் ஆலயத்தில் ஆறுமுகப் பெருமான் சந்நிதி முன்புள்ள கந்தர் அலங்காரக் கொட்டகையில் 23-3-54 செவ்வாயன்று மாலை 6-30 மணிக்குக் கூடியது. திருக்குறளை வெள்ளியம்பாரியில் யானைமீது வைத்து ஆடவரும் பெண்டிரும் திருமுறைப் பாராயணம் செய்துவர வீதிஉலா நாதசுர கானத்துடன் நடைபெற்றது. ஆறுமுகன் அடிமை ஸ்ரீ பி. கே. ஷண்முகசுந்தரம் செட்டியார் ஸ்ரீ ஆறுமுகப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக விபூதி அலங்காரம் செய்வித்ததுடன் பூரண கும்பத்துடன் அறநூலாம் திருக்குறளையும் ஸ்ரீ இளவழகனாரையும் விழாத்தலைவரையும் எதிர்கொண்டு வரவேற்றார்கள்.

ஸ்ரீ ம. பொ. சிவஞான கிராமணியார் திருவள்ளுவர் வகுத்துள்ள அரசியலைப் பற்றி நீண்டதொரு பிரசங்கம் செய்தார். அதில் அவர் பின்வருமாறு வற்புறுத்தினார்:

வள்ளுவர் திருக்குறளில் அரசியல் நுட்பங்கள் மலிந்து கிடக்கின்றன. அவற்றைத் தமிழராகிய நாம் கற்றோமில்லை. கற்றாலும் அவை கவனத்தில் வைத்தோமில்லை. திருக்குறளில் கண்ட அரசியல் நடைமுறையில் இல்லாததால் அதனைக் கேட்க வேண்டுமென்ற ஆவல் மக்களுக்கு ஏற்படுவது இயற்கையே. குறள் மாறாத அடிப்படைத் தத்துவங்களில் தலையிடவில்லை. அதில் அமைச்சனை ஆக்குவது அழிப்பது பற்றிய பிரஸ்தாபம் கிடையாது. இதனால் கட்சி அரசியலைப் பற்றி நான் பேசப்போவதில்லை. பொது அரசியலைப்பற்றியே நான் ஈண்டு பேசப்போகிறேன். குறள் எக்காலத்திற்கும் எந்நாட்டவர்க்கும் பொதுவான அரசியலைப் பற்றியே பேசுகிறது. இறை என்ற பதத்தின் மூலம் அது அரசனையும் கடவுளையும் குறிக்கிறது. முறை செய்து காப்பாற்றும் நிறையுடை மன்னன்தான் மக்களுக்கு இறை எனப்படும் என்கிறார் வள்ளுவர். குடியாட்சி தோன்றியுள்ள இக்காலத்தில் முடியாட்சி பற்றிப் பேசும் குறள் செல்லுபடியாகுமா? என்ற கேள்வி பிறக்கலாம். பிறப்பு, இறப்பு, பீரங்கிபலம் இவற்றால் அடைவதற்கான பதவிகளைப் பற்றி அதில் பேச்சே இல்லை. அரசு என்ற பொதுப் பதத்தால் வள்ளுவர் அரசாங்கத் தலைவனைக் குறிப்பிடுகிறார்.

முடியாட்சியாயினும் சரி, சர்வாதிகார ஆட்சியாயினும் சரி, ஜனநாயக ஆட்சியாயினும் சரி ஒரு தலைவன் இருந்தே ஆக வேண்டியிருக்கிறது. அந்தத் தலைமை அதிகாரியையே வள்ளுவர் அரசனெனக் கூறுகிறார். எந்த மனிதனுக்கும் கடமை, உரிமை இரண்டுமுள்ளது. வள்ளுவர் குறள் நெடுக கடமையைப் பற்றிப் பேசுகிறாரே ஒழிய உரிமையைப் பற்றிப் பேசவே இல்லை. தற்கால உலகில் நாம் உரிமை என்னும் படுகுழியில் இருக்கின்றோமே யன்றி கடமை என்னும் சிகரத்தில் இல்லை. உரிமையானது தேடிக்கிடைப்பதில்லை. அது தானாக கடமையைச் செய்வதன் பயனால் வருவது. இதனால் சட்டசபையில் கடமைகளைச் செய்யாமல் உரிமைப் பேச்சுப் பேசி வீண்காலம் கழிப்பவர்களுக்கு திருக்குறள் பொருட்பாலைபாடம் வைத்து அதில் தேறினால்தான் சட்ட சபை மெம்பராக நிற்க அருகதை உண்டாகுமென விதி செய்வது உசிதமென்று எனக்குத் தோன்றுகிறது. அரசு எத்தன்மை வாய்ந்தவனாக இருக்கவேண்டுமென்பதை வள்ளுவர் பின்கண்ட குறளில் விளக்குகிறார்:

"காட்சிக்கு எளியன்
கடுஞ்சொல்லனல்லனேன்
மீக்கூறு மன்னனிலம்"

"முறைசெய்து காப்பாற்று
மன்னவன் மக்கட்
கிறை யென்று வைக்கப்படும்"

"செவி கைப்பச் சொற்பொறுக்கும்
பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்குமுலகு"

பிறகு ஸ்ரீ ம. பொ. சி சிலப்பதிகாரத்திலிருந்து கண்ணகி பாண்டிய மன்னனைக் கண்டு பேசிய படலத்தை எடுத்துரைத்து அக்காலத்திய பாண்டிய மன்னன் எப்படி காட்சிக் கெளியனாய் செவி கைப்பச்சொற் பொறுக்கும் பண்புடையவனாய் இருந்தான் என்பதையும் கூந்தலை விரிப்பது எப்படி அக்காலத்தில் போர்ப்பிரகடனத்திற்கான அறிகுறியாகக் கொள்ளப்பட்டதென்பதையும் அல்லலை ஓட்டி ஆறுதலை அளிப்பதே மன்னனது கடமை என்பதையும் அக்காலத்தில் அகதிகளுக்குத் தர்மச் சாவடிகளிருந்ததால் புரட்சி, கிளர்ச்சி முதலிய பதங்களுக்கே குறளில் இடமில்லாதிருப்பதையும் விளக்கினார். அவர் மேலும் பேசியதாவது:—
அரசாது முதல் கடமை கல்வி போதிக்க வழி செய்வதேயாகும். கல்வி என்றால் புத்தகப் படிப்பென்று அர்த்தங் கொள்வது தவறு "கல்லாருமில்லை கல்வி முற்று வல்லாருமில்லை" ஆணவம் வளராமல் கடுப்பதே கல்வியாகும். ஆணவம் படித்ததை மறைத்துவிடுகிறது. கற்றலில் கேட்டலே நன்று என்பது முடிவு. மந்திரிகளுள் பழங்குடி மக்களுள் ஒருவரேனுமிருக்க வேண்டும். மந்திரிகள் 'கலையின் குப்பை'யாக விளங்கவேண்டுமென்பதால் குப்பையில் பல பொருள்களின் பகுதிகள் குவிந்து காணப்படுவதுபோல மந்திரி பலவிதத் துறைகளிலும் ஞானம் வாய்ந்தவனாக இருக்கவேண்டும். உறுபசி, ஓவாப்பிணி, செறுபகை இவற்றை அரசன் போக்கவேண்டும். தேசபக்தி தெய்வபக்தி குன்றிய நிலையில்தான் இவை தோன்றும். படை வீரர்கள் தேசத்திற்காக பலியாகும் முதல் தியாகிகள். ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும் குறளின் படை மாட்சியின் பகுதியை மொழிபெயர்த்து நம் படைகளுக்கு வழங்கவேண்டும். படையானது 'கூற்றுடன்று மேல்வரினும் கூடி யெதிர்நிற்கு, மாற்றலதுவே படை' என்ற குறள் படையின் இலக்கணத்தை விளக்கும் குறளாகும்.

படை 'தொல்படை'யாக இருக்கவேண்டும். பட்டாளத்தினருக்கு சம்பளம் அரசன் புகழும்படியாக, நினைந்து கண்ணீர் விடும்படியாக உயிர் படுவதேயாகும். பகலில் தூங்குவது பண்பன்று சட்டசபைகளில் பேசுகிற மந்திரி முதலியோர் உண்மையுடனும் வெல்லும் சொல்லுடனும் பேசவேண்டும். போர்க்களத்தில் வீரனுக்கு ஈரம் வேண்டும். அறம் உயிர், அரசியல் உடல், அரசியல் வாதிகள் இறை மாட்சியை அறிந்திருப்பது அவசியம்.

Telegrams: "RAMBROS"
N. Ramu Bros,
GENERAL HARDWARE
MERCHANTS
AVANASHI ROAD,
COIMBATORE.

மனிதன் மூடனா?

ஆண்களுக்குக் காமஉணர்ச்சி எழுந்தால் அதற்கு முறையீடு செய்துக்கொள்ள பெண்தான் கருவியாக வேண்டுமா?

இக் கேள்விக்கு என்ன விடை? காரணம் தெரியவில்லை. எனவே, காரணம் தெரியாது செய்தலால் அது மூட நம்பிக்கையே.

மரத்திலிருக்கும் கனி கீழ் நோக்கி ஏன் விழுகிறது? ஏன் மேல் நோக்கிச்செல்லக்கூடாது? கனி ஏன் விழுகிறது? இன்னும் கேட்போமானால் மரம் ஏன் காய்க்கிறது; முடிவாக மரம் ஏன் தோன்றிற்று? இவ்வாறாகக் கேட்டுக்கொண்டே செல்வோமானால் நமக்கே புரியாத ஒரு செயலாகத் தோன்றும்.

மனிதன் ஏன் பிறந்தான்? உலகம் ஏன் உண்டாயிற்று? இவ்வித ஆராய்ச்சி முடிவில் புரியாத சக்தியால் திணறடிக்கப்பட்டுத் திரும்பும். எனவே புரியாத அச்செயலை அறிந்துகொள்ள முடியவில்லை. புரியாதவரையில் மனிதன் மூடனே! என்கின்றனர்.

புவிக்கு இழுப்புச்சக்தி இருப்பதால் கனி கீழ் நோக்கி விழுகிறது. பெண்ணுக்கும் அவ்விதமான ஒரு சக்தி யிருப்பதால்தான் ஆண்களும் நாடுகின்றனர். மரத்தில் பழுத்து முதிர்ச்சியடைந்த கனியின் காம்பு சக்தியற்று மரத்தை விட்டுப் பிரியும் போதுதான் புவி இழுக்கிறது. ஆணுக்கும் காம உணர்ச்சிப் பருவம் வருவதால், காதலுக்குப் பெண் முறையீடு செய்கிறாள். எனவே ஆணுக்கும், பெண்ணுக்கும் உள்ள அந்த சக்தியே இருவரையும் ஒன்று சேர்க்கிறது.

ஆண் ஏன் பெண்ணிடம் சேர வேண்டும்? மிருகத்திடமோ, மற்ற எந்த வழியிலோ, முறையீடு செய்துக்கொள்ளக்கூடாதா? செய்து கொள்ளலாம். மனிதன் உயிரினங்களில் உயர்ந்தவன்; உயர்ந்த இயல்பினன்; மனத்தையுடையவன். பகுத்தறியும் ஆற்றல் படைத்தவன். ஆண் பெண்ணைத் தேடாதும் விடலாம். வேறுவழியையும் தேடலாம்.

இந்தக்காம உணர்ச்சி மிருகத்தினிடமும் உண்டல்லவா? அப்படியானால் நாய் ஏன் நாயைத் தேடுகிறது? ஏனைய பிராணிகளும் தத்தம் இனத்தையே நாடுகின்றன. மனிதன் மிருகத்தையும் மிருகம் தாவரத்தையும், பறவை ஊர்வனற்றையும் புணர்ந்து உலக விருத்தி தேடக்கூடாதோ? அப்படியில்லாமையின் காரணமென்ன? தத்தம் இனத்தையே நாடுவதின் காரணம் என்ன? இதுதான் புரியவில்லை. மனித அமைப்பு மிருகத்துக்கில்லை. மிருக அமைப்பு மனிதனுக்கில்லை உயிரினங்கள் மாறுபட்ட தோற்றத்தோடு காட்சியளிக்கின்றன. மேலும் காம உணர்ச்சி எல்லாவற்றிற்கும் இருந்தாலும், மனிதன் அதற்கு முறையீடு மட்டும் இருந்தால் போதுமென்ற எண்ணம் உடையவனல்லன். அவன் உணர்ச்சிக்கு வேறு வழிதேடினாலும், சங்கடம் தீருமே யொழிய அவன் இயல்புக்கு அது ஒத்ததல்ல மன நிம்மதியும், ஆனந்தமும் இல்லை.

பழங்காலத்தைப் பார்த்தாலும் அங்கும் இதே நிலையைத் தான் காண்கிறோம். ஆனால் அக்காலத்தில் தாய் தந்தை, சகோதரன், சகோதரி என்ற உறவு முறையில்லை. ஆணுக்குப்பெண் பெண்ணுக்கு ஆண் மிருகம்போல் வாழ்ந்த நிலையிலும் மாறவில்லை. ஏன் அப்படி? இதுதான் புரியாத புதிர். தெளிவான முடிவு. உலகப் படைப்பு அவ்விதம் அமைந்தது. இந்த அடிப்படை என்றும் மாறாது. ஆனால் கத்தி தீட்டத் தீட்டக் கூருவதுபோல் மனிதனின் அறிவும், பலவித உணர்ச்சிகளும் தத்தம் நிலையில் வளர்ந்து நாகரிகமாகியது.

இன்று காமம், வெறும் காமமாகவே இல்லை அது தெய்வீகக் காதலாகப் பரிணமிக்கிறது. மனித வாழ்வைச் சிறப்பிக்கிறது அது இழிவானதல்ல. உயர்வானது. வெறுக்கப்பட வேண்டியதல்ல போற்றற்குரியது. ஆனால் அறியாதார் செயலுக்கு காமம் காரணமல்ல அவரவர் அறிவுதான் காரணம். ஆயிரமாயிரம் ஆண்டைக் கடந்த மனிதவர்க்கம், இந்த அடிப்படையில்தான் இவ்வளவு முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. அவ்வவ்விடத்தின் தட்ப வெப்ப நிலைக்கேற்றவாறு நடை, உடை பாவனை ஆகியவைகள் மாறுபடுகிறதே யொழிய, உடலோ, உணர்ச்சிகளோ மாறுபடவில்லை. இன்று ஒரு ஆண் பெண்ணிடம் எதிர்பார்ப்பது என்ன? பெண் ஆணிடம் எதிர்பார்ப்பதென்ன? ஆண் பெண்ணைக் காமக் கருவியாகவே நினைக்கிறான்? பெண் தன் இச்சை பூர்த்தியாக வேண்டுமென்று நினைக்கிறாளா? ஆண் பெண்ணை நோக்குகிறான்; பெண் ஆணை நோக்குகிறாள். இதுவேண்டியதில்லை ஏன்? காமக்கருவியாகவே இருவரும் எண்ணுவாராகில்,

'அணங்கு கொல் ஆய் மயில்
கொல்லோ கனங்குழை
மாதர் கொன் மாலும் என் நெஞ்சு'

என்ற வள்ளுவர் குறளுக்கு இடமில்லை. காம உணர்ச்சிக்கும் நெஞ்சுக்கும் என்ன சம்பந்தம்? அந்த சம்பந்தம் உண்டானதினாற்றான் மனிதன் சிறப்படைகிறான்.

மிருகம் எந்த அழகைப் பருகுகிறது? அந்த சமயத்துக்குத் தக்கமுறையீடு செய்து கொள்ளுகிறது. அது அதன் இயல்புப் படியாகிறது. மனிதன் அவ்வாறில்லையே! பெண்மான் ஆண்மானை நோக்குகிறது. அதில் விசித்திரம் ஒன்றையும் காணோம். சிறப்பாகக் கூறத்தக்கவை ஒன்றுமில்லை. ஆனால் அன்புடைய இருகாதலரிடத்தில் ஏன் அவ்வாறு இருக்கவேண்டும்.

'நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள்
யாப்பினுள் அட்டிய நீர்.'

ஏன் அவ்வாறு செய்கிறாள் பெண்? இருவரும் ஒரே இனம் தான் ஒரே உணர்ச்சிதான் ஆனால் காதலன் தன்னைப்பார்க்காதபோது அவனைக் கண்டு ஏன் மனதுள் மகிழவேண்டும்? நாணி நயனத்தின் வழியாய்க் குறிப் புணர்த்தவேண்டும்! இப்போது அவனும், அவளும் காமத்துக்காக மட்டும் செயல் புரியவில்லை. பின் வேறெதற்காக இவ்வினைகளைப் புரிகின்றனர்: உடல் மனோ சக்திகளுக்கு தக்க முறையீடு செய்கின்றனர். ஆணும் பெண்ணும் வாழ்க்கையில்புகுந்து இன்பம் அனுபவிக்கத்தான் இவ்விதக் களியாட்டங்கள். இவ்விருவர்களிடமும் எத்தகைய உணர்ச்சிகள் குவிந்து கிடக்கின்றனவோ அதெல்லாம் இப்பொழுது வெளிப்படுகிறது. ஆனால் இவ்விருவருக்குமுள்ளது வெறுந் தொடர்பாக மட்டுமில்லை ஆனால் மிருகங்களிடம் வெறுந் தொடர்புதான்.

‘உடம்பொடு உயிரிடை என்ன
மற்றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு.’

இருவரின் தொடர்பும் உடம்புக்கும் உயிருக்கும் போன்றது. ஆனால் இத்தொடர்பு மனிதனிடத்திலேதான் சிறப்பாக அமைந்துளது.

ஊடலும் கூடலும் மனித இயல்பில் பெருமை மிக்கது. இதுவே வாழ்வின் சுருதியாக உள்ளது. காதலன் காதலியை உயிர்க்கு மேலாகக் கருதினான். அவளும் அவ்வாறே கருதினாள். ஆனால் இருவரும் என்றோ ஒருநாள் அழிவது திண்ணமே. எனவே அவர்களின் காதல் நிலையானதாகுமா? காமம் என்ற ஒன்றே குறிக்கோளாயின் வாழ்வின் ஒரு பகுதியில் அல்லவா அது நிகழும். அதாவது வாலிபத்தில் காமம் நிறைந்து காணப்படுவது அப்பொழுதான். ஆனால் ஏனையவற்றைப்போல் அப்பருவத்தில்மட்டும் அவர்களின் தொடர்பு இருக்கவில்லை. நீளுகிறது. காரணம் உண்மை அன்பு எப்பொழுதும் அவர்களைக் கூட்டி வைக்கிறது.

‘இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றே
கண்ணிறை நீர் கொண்டனள்’ [னாக்

இந்தப் பிறப்போடு மட்டும் நம் தொடர்பு இருக்கக் கூடாது எந்த பிறப்பிலும் இருக்க வேண்டும் என்று அழுகின்றாள் காதலி. இவ்வித சிறப்பியல்புகள் இருத்தலினாற்றான் இவ்வியல்புப்படி, ஒரு வரன்முறைக்காக மணவினை நடக்கிறது. இம் மணவினையை நாம் குறைகூற முடியுமா? இது மூடத்தனம் ஆகுமா? உயிர்க்குயிராக பாவிக்கச் செய்யும் அச்சக்தியின் பெருமை சொல்லத்தரமன்று மனித சமுதாயத்தையே புனிதப் படுத்தும் அந்த சக்தியின் பெருமையே பெருமை

உலகின் சிறிய சன்மார்க்கத் தலைவர்கள்

3. புத்தர்—கி. மு. 600.

(முன் தொடர்ச்சி)

பௌத்தத்தைஒரு சமயமென நாம் அழைக்க விரும்பினால், அதில், யாதொரு கடவுளுமற்ற, ஒரு வழிபாடற்ற, சீலமற்ற ஒரு சமயத்தையே காண்கின்றோம். அதன் வெற்றி ஒரு விழுமிய சமயக் கோட்பாட்டாலல்ல. அதனகத்தே உள்ள ஒரு நன்னெறி உணர்வையும், புற இயக்கத்தையுமே அதன் வெற்றிக்குக் காரணங்களாகக் கூறலாம். அது இந்திய நாட்டில் எழுந்தது. இந்தியப் பண்பாடுகளுக்குச் செடல் முறையில் ஓர் உருக் கொடுத்தது; அதிவேகமாகப் பிறந்த நாட்டிலும் அண்டை நாடுகளிலும் பரவியது.

இன்றைய பௌத்த சமயத்தைக் கொண்டு அதன் உண்மையையோ, அல்லது உயிரினங்களின் உள்ள வளர்ச்சியின் விளைவையோ நாம் அளந்தறிய முடியாது. இதற்கு ஆதி பௌத்தத்தைத் தான் ஆராய வேண்டும்.

அது கடவுளர் அற்ற ஒரு சமயம். அதன் கோட்பாடோ, வாழ்வு துன்பமயமானது என்பதும் அதிலிருந்து தப்புவது தான் தலையாய நன்மை என்பதுமாகும்.

புத்தர் வரலாறு நமக்குப் புதிதல்ல; மக்களின வரலாற்றில் அது ஒரு புகழ் மங்கா ஏடு; கிறித்து பிறப்பதற்கு முன் ஆறு நூறாண்டுகளுக்கு முன் இமயத் தொடர்களுக்கருகில் பிறந்தார். தந்தை சுத்தோதனர்; சாக்கிய வம்சத்தின் கீர்த்தியும் வன்மையு மிக்க தலைவர்; தாய் மகா மாயா; சித்தார்த்தன் என்பது பிள்ளைப் பெயர்.

பத்தொன்பதாண்டு நிறையப் பெற்றதும் யசோதரை என்ற மாதை மணந்தார்; முப்பதாண்டுகள்வரை, இவ்வுலகின் துன்பங்களுக்கும், இன்னல்களுக்கும், வெகு தூரத்தில் அரச மாளிகையின் பாதுகாப்பான மதில் சுவர்களுக்குப் பின்னால் சாக்கிய இனத்தின் தலைவனாகத் தந்தையைப் பின்பற்றும் அந்த நாட்களை எதிர் நோக்கி வாழ்ந்து வந்தார்.

ஆனால், முப்பதாண்டுகள் கழிந்ததும், வேறு வேறு நிலைகளில் அரச மாளிகையை விட்டு வெளிச் செல்ல நேர்ந்தபோதேற்பட்ட அனுபவத்தின் விளைவே புத்தரின் அழியாப் புகழுக்கு அடிகோலிற்று.

முதுமை அடைந்தும், உழைப்பால் ஆயர்ந்து மிருந்த ஒரு முதியோனின் சக்திபிழந்த கை, கால்கள், வாழ்வின் சுமையைத் தாங்கத் தகுதியற்றிருந்த காரணத்தையும், மிகக் கொடிய ஒரு நோயால் வருந்திய ஒருவனின் துன்பத்தின் காரணத்தையும்; உயிர் நீங்கிய உடலொன்றை

காம உணர்ச்சி பெழுந்த ஆணும் பெண்ணும் காதலர்களாகி, கணவன் மனைவியாகி சுகம் அனுபவித்து மனமொத்து வாழும் வாழ்க்கை மூடத்தனம் ஆகாது. இடையில் ஏற்படும் குறையும், இம் மணவினையைத் தத்தம் விருப்பம்போல் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளும் நிலையையே மூடத்தனம் எனலாம்.

—நாராயணசாமி.

சாலையோரத்தில் கண்டு மருண்டபோது அதன் காரணத்தையும் தன் தேரோட்டியான சன்னனை வினவிய போது, அவன் இறுத்த விடையோ புதுமையாயிருந்தது:-

"இவ்வுலகில் எண்ணிலாத ஏழை மக்கள் உள்ளனர். இம் முதியோரைப்போல் ஒருவன் கூடுதலாகவோ அன்றிக் குறைவாகவோ இருப்பது ஒரு பொருட்டில்லை........"

"இவ்வுலகில் கணக்கற்ற நோயாளிகள் உள்ளனர் இது தவிர்க்கமுடியாதது; மேலும் அவ்வளவு பொருட்படுத்தக்கூடியதுமல்ல......."

"இந்த உலகம் நிறையப்பிணங்களைக் கொண்டுள்ளது. எல்லாப் பொருள்களும் ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்பது வாழ்வின் நியதி. எதுவும் அழியாததல்ல. இடுகாடு நாக்கெல்லோருக்காகவும் காத்திருக்கின்றது. இதிலிருந்து தப்ப வழியில்லை........"

அந்நாட்கள் தொட்டுசித்தார்த்தருக்கு வாழ்வின் எந்த இன்பத்திலும் பங்கு கொள்ள முடியவில்லை. வாழ்வின் திரை ஒதுக்கப்பட்டது. மனித வாழ்வின் கொடுமைகள் அம்பலப் படுத்தப்பட்டன. வாழ்வின் சிக்கல்களைத் தீர்க்க ஒரு வழி காணும் வரை இனி அவரால் அமைதியாய் இருக்க முடியாது இதைத் தன் அன்புக்குரியவர்களை விட்டு நீங்கி அதிதூரம் சென்று தான் தெளிய வேண்டும்.

நிலவொளி ஆட்கொண்ட ஒரு நள்ளிரவில் தன் அருமை மனைவியையும் இளங் குழவியையும் நீத்து உண்மையை நாடிச் சென்றார், போதி மரத்தடியில், நீண்ட நாள் உடல் வருந்தித் தவமிருந்து உள்ளொளி பெற்று "புத்தர்" என்ற பெயர் பெற்ற வரலாறும் நாம் அறிந்ததே.

மக்கள் வாழ்வில் இடைவிடாது பின்னியுள்ள துன்பத்தின் காரணத்தைத் தெளிந்த அந்த நாள் தொட்டு, தங்களை அழியும் வாழ்விலிருந்து விடுவிக்க வந்த பெரியோனாக அவரை மக்கள் எண்ணினர். வாழ்வின் எஞ்சிய நாற்பத்தைந்து ஆண்டுகளைத் தன் எளிய போதனைகளில் கழித்தார். எல்லா மக்களுக்கும் உரியதாக அவர் உரைகள் உள்ளன.

புத்தர், ஒரு சமயவாதி அல்லவென்றும், அவர் நாட்களில் இந்திய மண்ணில் நிலவி இருந்த ஒரு சமயத்துக்கு மாறாக எழுந்த ஒரு சாத்விகப் புரட்சியே அவர் இயக்கமென்றும், சிலர் கருதுவது இயல்பாயுள்ளது. அக்கால சமூக அமைப்பும், நிலையும் இதற்குச் சான்று பகர்கின்றன

ஆரிய மக்களின் படைபெடுப்பிற்குப்பின், இந்நாட்டின் பழங்குடிகள் அடிமைகளாக்கப்பட்டனர் வெற்றியெய்திய ஆரியர் பல ஆண்டுகள் வருந்தித் திரிந்து கண்ட வளமிகுமிந் நாட்டில் நிலை கொள்ளும் பொருட்டு, நாளடைவில் கடுமையான இனப்பிரிவை உண்டு பண்ணினர். அந்த அமைப்பில், ஆரிய இனத்தின் வழிவந்தவர்களே, சமூகத்தின் உயர்ந்த இனத்தினர். நாட்டின் ஆட்சியும் வாணிபமும், சமய அலுவல்களும் அவர்களிடையே பிறப்புரிமையாய் இருந்தன. பழங்குடிகள், நிலையில் தாழ்த்தப்பட்டும், அடிமைகளென்று ஒடுக்கப் பெற்றும், உரிமை வாழ்வற்று இருந்தனர்.

ஆரியர்கள், பல்லாண்டாகத் தாங்கள் நடத்திய நாடோடி வாழ்வுகளில், பல புதுமையான அனுபவங்களைக் கண்டார்கள். இந்நூதன அனுபவங்களின் தொகுப்பே "வேதங்கள்" எனப்படும். இவைகள் "சமஸ்கிருதம்" என்னும் மொழியில் எழுதப் பெற்றவை. அம்மொழி ஐரோப்பிய நாட்டின் பல்வேறு மொழிகளுடன் நெருங்கிய ஒற்றுமை கொண்டது.

இவ் "வேதங்களை" யும் சமூகத்தில் உரிமை இழந்தோர் கற்க முற்படக் கூடாது. ஆகவே இந்திய மக்களில் ஒரு பெரும் பகுதியினர் துன்பத்தில் வாழ்ந்து வந்தனர்.

அக்கால ஆரிய சமயப் பழக்க வழக்கங்களில் சிற்றுயிர்களின் பலி மிகுந்து காணப்பட்டது. இளங்கன்றின் புலாலும், சோமப் பூண்டின் மதுவும் கடவுளர்களுக்கும் மக்களுக்கும் மிகவும் பிடித்தவை. வேள்விகளில் குதிரை, பசு இளங்கன்று இவைகளின் பலி இயல்பா யிருந்தது.

இந் நிலையில்தான் சமணமும், பௌத்தமும் உருக்கொண்டன. இரண்டுமே உயிர்களின் துன்ப நீக்கத்திற்கு முனைந்து உழைத்தன.

புத்தரின் உரைகளில், அக்காலத்தில் நிலவியிருந்த சமயத்தின் பொருளற்ற பழக்க வழக்கங்களையும் உயிர்ப்பலிகளையும், புரோகிதர்களின் உரிமைகளையும் பொருந்தாக் கூற்றுகளையும் மறுக்கும் திறன் உள்ளீடாக அமைந்துள்ளது மதப்பிரிவினைகளை நேரடியாகத் தாக்காவிடினும் அவர் நிறுவிய ஒரு சட்டத்தில் அவ் வெதிர்ப்பைக்காணலாம். அவர் செயல்களும், கொள்கைகளும் மதப்பிரிவினையைச் சக்தியிழக்கச் செய்தன.

மக்களின் துன்பத்திற்கு இரங்கி, அரச வாழ்வை நீத்து சாத்வீக முறையில் அமைதிக்குத் தன் அனுபவத்தால் ஒரு வழி கண்டார். அவ்வழியையே பிற

ரும் பின்பற்றக் காட்டினர். அவர் நெறி நடை முறைக்கு ஏற்றதாயும் ஆக்கமுள்ளதாயும் இருந்தது. அது பிறர்மீது வலியத்திணிக்கப்படவுமில்லை. அவர் காலத்தில் அதை எதிர்த்தாரைக் காணமுடியாது. அவர் மறைவுக்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின்புதான் மற்ற சமயத்தவர்கள் பௌத்த சமயத்தை எதிர்த்தனர்.

பௌத்த சமயத்தின் கோட்பாடு வாழ்வின் ஒரு குறித்த சிக்கலுக்கு—துன்பத்திற்கு—விடை பகர்கின்றது.

பிறவி துன்பமானது; அழிவு துன்பமானது; நோய் துன்பமானது; நமக்கு வேண்டாப் பொருள்களின் காண்கை துன்பமானது. நாம் விழையும் பொருள்களின் பிரிவு துன்பமானது; விரும்பியதைப் பெறாதது துன்பமானது.

வேட்கையே பிறவிக்கு வித்து, பிறவியில் அவாவும் காமமும் இங்கும் அங்கும் போலி இன்பத்தைக் காண்கிறன.

இந்த வேட்கை மூவகை: இன்பத்திற்கு வேட்கை, வாழ்வதற்கு வேட்கை, சுகபோகத்துக்கு வேட்கை.

அவா அடக்கமே துன்ப அடக்கம். எல்லாவித ஆசைகளின் அடக்கமுமாகும். அதிலிருந்தே விடுதலை வேண்டும்.

நேரிய கொள்கை, உரிய வேட்கை, உரிய சொல், உரிய நடக்கை, உரிய வருவாய், உரிய முயற்சி, உரிய நினைவு, உரிய தியானம்—இவை துன்ப நீக்கத்துக்குச் செலுத்தும் நெறி.

அவாவை வென்று, பிறவித் துன்பத்தை நீக்க உயிர்தான், பௌத்தசமயத்தில் "நிர்வாணம்" என்ற வீட்டு நிலை எய்தியதாகக் கொள்ளப்படுகின்றது.

—பா. வரதராசன்.

* அனாதைகள் *

(நாராயணசாமி)

தாங்க முடியாத துயரச் சுமையைத் தாங்கிக்கொண்டு நடந்தான். மனம் வேதனைத் தீயில் வெந்துகொண்டிருந்தது. உடல் ஒரு ஊன் பொதியாகவே அவனுக்குத் தோன்றிற்று. கால்கள் தடுமாறின. தலை கனத்தது இந்த நிலையில் ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்துக்கொண்டு நடந்தான் அவன். வெகு நேரமாக நடக்கிறான். பகல் உணவு கூட இல்லை. பசி வேறு உபத்திரவம் தந்தது. உதடு உலர்ந்துவிட்டது. கண்கள் இருண்டது. ஒரு விநாடி மயக்கம் போட்டது. சமாளித்து நின்ற அவன் இனித் தன்னால் ஒரு அடியும் எடுத்து வைக்க முடியாதென்பதை உணர்ந்தான். எங்காவது உட்காரலாமா என இடந்தேடினான். சற்றுத் தொலைவில் பனைகளும், ஏரியும், ஊரும் இருப்பதாகத் தெரிந்தது. நடந்தான்; நடந்துகொண்டே எண்ணினான்; 'உலகத்திலுள்ள எந்த மனிதனும் தன்னைப்போல் இவ்வளவு துயரை அனுபவித்திருக்க முடியாது. வரவும் வராது' என்று. ஆனால் அவன் யூகம் பொய் என்பதற்கு எத்தனையோ நிகழ்ச்சிகளைக் கூறலாம். அவன் வாலிபன், அறிவு முதிராதவன். உலக அனுபவம் பற்றாதவன். தன் துயரே பெரிதென எண்ணுகிறான்.

வாழ்க்கையில் ஒரு சிறிதும் வளப்பமின்றி வறுமையிலும், தீராத இன்னலிலும் அகப்பட்டுத் தவிக்கும் ஆயிரக் கணக்கான அனாதை மக்களைப்பற்றி அவனுக்கெங்கே தெரியப்போகிறது. அவர்களையெல்லாம் மீள முடியாத நரகத்தில் மிதக்கவிட்டு வாழவும் முடியாமல், சாகவும் முடியாமல் உயிர் ஊசலாடும் நிலையில் நோக்கமற்று இயங்கும் அவர்கள் வாழ்க்கையைச் சூத்திரக் கயிறு கொண்டு ஆட்டுவித்து அவதிப்படுத்தும் அவல வாழ்க்கையைப் பற்றி அவன் எப்படி அறிவான்.

தன்னைப்போல் துர்ப்பாக்கிய சாலி எவருமில்லை என்று எண்ணினான். அவன் வாழ்க்கையே குப்பைமேடாகி வறிஞராய் வாழும் மக்கள், தன்சுக சௌக்கரியங்களையெல்லாம் ஊருக்கு, உலகுக்கு, நாட்டுக்கென்று தத்தம் செய்து ஒரு சிலரை சுக போகத்தில் வாழவிட்டு அவர்கள் வாழ்க்கையைக் கண்டு மன மகிழும் மக்களைவிடவா இவன் துர்ப்பாக்கிய சாலி. இன்ப துன்பம் சகஜம், ஒருவன் வாழ்வில் இதுவரை இன்பம், இதுவரை துன்பம் என்ற வரையறையேது? அது நினைத்த போதெல்லாம் வந்து தொலைக்கிறது. எனவே, மனிதன் திடீர் திடீரென்று வரும் இன்ப துன்பங்களை ஏற்றுச் சமாளிக்கும் திறம்பெற்றவனாக மட்டும் இருந்து விட்டால் அவன் வாழ்க்கை ஒரு நிலையில் இயங்கும்.

அவன் ஊரை அடைவதற்கும் வெய்யோன் மறைவதற்கும் சரியாக இருந்தது. நீர் நிறைந்த ஏரியின் எதுவாயில் செல்றது பாதை. பாலம் அமைக்கப்பட்டிருந்த இடத்தில் சென்று "அப்பாடி" என்ற பெருமூச்சுடன் அமர்ந்தான். இவ்வளவு நேரமாக நடந்து நடந்து ஓய்வுக்காகத் தவித்த காலுக்குச் சற்று ஆறுதலாக இருந்தது. அவன் உடலைப் பாலம் தாங்கிக்

கொண்டது. இனி அவன் மனக் கவலையைத்தாங்குவதற்கு ஒன்று மில்லை. தன்னைச் சுற்றிலும் ஒரு முறை பார்த்தான், அந்தி நேரமாகையால் நீர் சற்று ‘குளு குளு’ வென்றுவீசி, சற்று ஆறுத லளித்தது.

ஆதவன் அவ்வூரின் மேற்கில் சுவர் வைத்ததுபோல் அமைந் துள்ள மலையினுள் வீழ்ந்தான். இருள் சூழ்ந்தது. சற்று நேரம் அத்திக்கையே நோக்கிக்கொண் டிருந்த அவன் எதிர்ப்புறம் திரும் பினான். ‘ஆ! என்ன காட்சி என்று வியந்தான். இவ்வளவு நேரமாக அவனைத் துன்புறுத் திய பசியும், துயரும் எங்கேயோ ஓடி ஒளித்தன, தான் கண்ட காட்சியில் மனதைச் செலுத்தி னான்.

அவ்வூரின் கீழ்ப்பால் அமைந்த மலை அருகினின்று பொன் மய மான ஒளிவீசும் ஒரு வட்ட வடி வமான தட்டு வான வெளியில் மிதந்து கொண்டிருந்தது. அத னைச் சுற்றிலும் மின்னும் வெண் புள்ளிகள் தோன்றின. சிறுகச் சிறுக ஒளி மாறி இப்பொழுது தூய வெண்மையானநிலா காட்சி யளித்தது. அதன் ஒளிக் கிரணங் களைத் தடுத்த மலையின் ஒரு புறம் கருமையாகக் காட்சி தந்தது. கீழும், மேலும் கருமேகங்கள் லேசாகப் படர்ந்திருந்தமையால் அங்கே கருமை யுமாகவும் காட்சி தர, நடுவே பிரகாசித்தது நிலவு. அதன் ஒளி நீர் நிலையில் ராஜ பாட்டையாக விழுந்தது.

இந்தக் காட்சி அவனின் சங் கரனின் துயரை ஒருவாறு போக் கடித்தது. அதனோடு இணைந்தான் சங்கரன். எரிந்துகொண்டிருக்கும் மின் விளக்குத் திடீரென அணைந்து எங்கும் இருள் படரச் செய்து தானும் இருளில் அகப் பட்டதுபோல் அவன் வாழ்க் கையும் அமைந்தது. அதெல்லா வற்றையும் மறந்து அந்த உள் ளத்தைக் கொள்ளை கொள்ளும் காட்சியில் மனதைச் செலவிட்டு மெய் மறந்தான்.

நீர் நிலை இருக்கிறது. அது போல் வாழ்க்கையும் அமைந் துளது. அந் நீர் நிலையில் சிறிய படகில் செல்லும் இணையற்ற தம் பதிகள் அக் காட்சியைக் காட்சிக் கெல்லாம் காட்சியாக மாற்று வதுபோல் வாழ்க்கையிலும் சிறப்பு அமைந்து வாழ்வைச் சிறப்பிக்காதோ என்ற எண்ணம் எல்லோர் மனதிலும் எழுவது உண்டு.

மலரிலிருந்து ஊறிய தேனை உறிஞ்சி மாற்றிச் சுவையாக்கிச் சேமிக்கிறது தேனீ. ஆனால் அதனோடு தினைமாவும் கூட்டிக் குழைத்து உண்ணும்போது மதுரமாக இல்லையா? ஆணும், பெண்ணும் சேர்ந்து இன்பியல் வாழ்க்கை நடத்தும்போது தானே வாழ்வில் ருசி இருப் பதாகத் தெரிகிறது. கலையற்ற உள்ளம் சந்திரனின் கலையில் ஈடுபடுமோ? காட்சியோடு கலை யுள்ளம் சேர்ந்தால்தான் பாவசத் தில் பாட முடியும்?

தரித்திரனின் கற்பனையாய், செவிடனின் சங்கீத ஞானமாய், குடிகாரனின் உறுதி மொழி யாய் அடுத்த விநாடி அடியோடு நினைவற்றுப் போகும் கலையுள் ளத்தின் பரிதாப நிலைக்கு இரங் கத்தான் வேண்டும். வாழ்க்கை யின் நோக்கம் வறுமையில் உழல்வதோ வஞ்சம்போன்ற இருள் கவிழ்ந்த உலகில் வாழ் வதோ அல்லாது இயற்கை யோடு தானும் ஒன்றி அவ்வக் காட்சியில் இரண்டறக் கலந்து உள்ளப் பக்குவத்தையும், வாழ்க் கைப் பண்பாட்டையும் பெறுவ தாக அமையின் எத்தனை இன் பம் மகிழ்ச்சி! இயற்கையின்— ஏகாந்தத்திலிருந்து எவ்வளவு தூரம் தள்ளி நிற்கிறோமோ, அவ்வளவு துயரையும், வேதனை யையும் அனுபவிப்போம் என் பது அறியக்கிடக்குமோர் உண்மையன்றோ?

வாழ்க்கையில் வனப்பும் வன்மையும் பெற இயலாமல் எத் தனை பேர் இன்னலில் ஆழ்ந்து மீளமுடியாமல் கதியற்றுக் கலங்கிக் கருகிப்போகின்றனர். இவர்களெல்லாம் அறிந்தோ அறியாமலோ ஏற்படுத்திக் கொள்ளும் சூழலுக்குப் பொறுப் பாளி யார்?

(வரும்)

Phone. 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்

சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட்மார்க்



பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53 கிடங்குத் தெரு, சென்னை 1.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)